## தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(08.12.2016 முதல் 12.12.2016 வரை)

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை– 612 101**

போன்: 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in Fax: 0435 2472881


==================================================================

தேதி:07.12.16

### கடந்த 5 நாட்களில் நிலவிய வானிலை (02.12.2016– 06.12.2016)

| காரணிகள் | கடந்த நாட்களில் வானிலை |
|---|---|
| மழை (மி.மீ.) | 28.2 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 27 – 30 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 23 – 25 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 4 – 6 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 71 – 93 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 2 – 4 |

### அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 08.12.2016 | நாள் 2 09.12.2016 | நாள் 2 10.12.2016 | நாள் 4 11.12.2016 | நாள் 5 12.12.2016 |
| மழை (மி.மீ.) | 0.5 | 0 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (°C) | 29 | 29 | 29 | 29 | 29 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (°C) | 24 | 24 | 24 | 24 | 24 |
| மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 5 | 5 |
| காற்றின் ஈரப்பதம் (%) | 75 – 88 | 75 – 88 | 75 – 88 | 75 – 88 | 75 – 88 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 3 | 3 | 3 | 3 | 3 |
| காற்றின் திசை | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு | வடகிழக்கு |

08.12.2016 முதல் 12.12.2016 வரை வானம் சற்று மேகமூட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். எதிர்பார்க்கப்படும் மழை அளவு 0.5 மி.மீ.

***வேளாண் அறிவுரைகள் :***

**பயிர் : நெல்,உளுந்து,,கரும்பு மற்றும் பருத்தி**

**பருவம் : சம்பா : புக்கும் பருவம் பயிர் தாளடி : தூர் கட்டும் பருவம்**

- சம்பா/தாளடி நெற்பயிரில ஊட்டச்சத்து பற்றாக்குறை தென்பட்டால் அதனை நிவர்த்தி செய்ய ஏக்கருக்கு 22 கிலோ யூரியா + ஜிப்சம் 18 கிலோ + வேப்பம் புண்ணாக்கு 4 கிலோ என்ற அளவில் கலந்து இரவு முழுவதும் வைத்து பின்னர் 10 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் கலந்து வயலில் இடவும்.

- தற்பொழுது நிலவும் வானிலையின் காரணமாக சம்பா நெற்பயிரில் பாக்டீரியா இலைகருகல் நோய் மற்றும் இலை கீறல் நோய்கள் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 20 சத பசுஞ்சாணக் கரைசலை நோய் அறிகுறி தென்பட்ட உடன் ஒரு முறையும் பிறகு 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்கவும் (40 கிலோ பசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து இரவு முழுவதும் ஊறவைத்து தெளிந்த நீருடன் மேலும் 100 லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு ஏக்கரில் தெளிக்கவும்) அல்லது காப்பர் ஹைட்ராக்ஸ்சைடு 500 கிராம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்

- சம்பா நெற்பயிரில் புகையான் தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. நெல்வயலில் பட்டம் பிரித்து தண்ணீர் வடித்து காற்றோட்டத்தை ஏற்ப்படுத்துவதன் மூலம் புகையான் தாக்குதலலிருந்து பயிர்களை பாதுகாக்கலாம். இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 40 கிராம் தயோமித்தாக்சாம் அல்லது ஃபுப்ரோபைசின் 25 எஸ்.சி. 320 மில்லி/ஏக்கர் என்ற மருந்தினை தூர் பகுதி நன்கு நனையும்படி தெளிக்கவும்.

**இயக்குநர்**